# கொசஸ்தலை ஆற்றில் எண்ணெய் கசிவால் மீனவர்கள் பாதிப்பு: தாமாக முன்வந்து பசுமை தீர்ப்பாயம் வழக்கு பதிவு



சென்னை எண்ணூர் முகத்துவாரம் அருகே மழை வெள்ளநீர் தொழிற்சாலைகளின் எண்ணெய்யுடன் கலந்து பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக கடலை நோக்கிச் செல்கிறது. இதனால் இப்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள மீனவர்களின் படகுகள் பாதிக்கப்பட்டுள்ளன.படம்: எஸ்.சத்தியசீலன்

**சென்னை:** சிபிசிஎல் நிறுவனத்தில் இருந்து கொசஸ்தலை ஆற்றில் வெளியேறிய எண்ணெய் கசிவு தொடர்பாக தேசிய பசுமை தீர்ப்பாயம் தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வருகிறது. ‘மிக்ஜாம்’ புயலால் கொசஸ்தலை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மணலி புதுநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வீடுகளை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. இந்நிலையில், ஆற்று வெள்ளத்தில் பெட்ரோலிய எண்ணெய்க் கழிவு மிதந்து வருகிறது. இது அப்பகுதியில் உள்ள மீனவர்களின் படகுகளில் கரிய பிசின் போன்று ஒட்டிக் கொண்டது. மேலும்,குடியிருப்புகளின் சுவர்களில் கரிய எண்ணெய் படிவும் ஏற்பட்டது.

இது தொடர்பாக அப்பகுதி மீனவர்கள் கூறியதாவது: எண்ணூர் பகுதியில் உள்ள காட்டுக்குப்பம், நெட்டுகுப்பம், தாழங்குப்பம், எண்ணூர் குப்பம், முகத்துவார

குப்பம், எர்ணாவூர் ஆகிய பகுதிகளில் உள்ள மீனவ குடியிருப்புகளில் தேங்கும் வெள்ள நீரிலும் கொசஸ்தலை ஆற்றில் செல்லும் நீரிலும் எண்ணெய் படலம்உள்ளது. அத்தியாவசிய தேவைகளுக்காக வெள்ளத்தில் செல்வோர்உடலிலும், உடையிலும் ஒட்டிக்கொண்டு, துவைத்தாலும் கறை விடுவதில்லை. அப்பகுதியில் பெட்ரோலிய நாற்றம் வீசுகிறது. பலருக்கு குமட்டல், வாந்தி, தலைச்சுற்றல் ஏற்பட்டு வருகிறது.

எண்ணூர் முகத்துவாரப் பகுதி, மீன்கள் இனப்பெருக்கத்துக்கு முக்கியமான பகுதி. இப்பகுதியில் எண்ணெய் படலம் ஏற்படுவது, கடல் மீன் வளத்தையே பாதிக்கும். இங்குதான் அதிக அளவில் இறால் இனப்பெருக்கம் நடக்கிறது.அதன் உற்பத்தியும் பாதிக்க வாய்ப்புள்ளது. ஆற்றில் எண்ணெய் திறந்துவிட்ட நிறுவனத்தின் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இனி இதுபோன்று நடைபெறாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதனிடையே, மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் எண்ணூர்மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கள ஆய்வு மேற்கொண்டனர். அதன்பின் வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், ``சிபிசிஎல் நிறுவனத்தின் தெற்கு வாயில் அருகே உள்ள மழைநீர் வெளியேறும் பகுதியின் அருகில் எண்ணெய் தடயங்கள் இருப்பது ஆய்வில் தெரியவந்தது. ஆனால், அந்த நிறுவனத்தின் தென் பகுதியில் இருந்து வெளியேறும் மழைநீரில் எண்ணெய் இல்லை. மிதக்கும் எண்ணெய்யை அகற்றுமாறு சிபிசிஎல் நிர்வாகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொருக்குப்பேட்டை பகுதியில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயிலும் எண்ணெய்படிவு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது" என கூறப்பட்டுள்ளது.

**சிபிசிஎல் விளக்கம்:** இது தொடர்பாக சிபிசிஎல் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், ``சிபிசிஎல் நிறுவனம் எண்ணெய்யை வெளியேற்றியதாக சமூக வலைதளங்களில் செய்திகள் வருகின்றன. சிபிசிஎல் மணலி சுத்திகரிப்பு ஆலையில் குழாய் கசிவு ஏற்படவில்லை. மிக்ஜாம் புயல் காரணமாக இடைவிடாத மழைபெய்தது. இதனால் சுத்திகரிப்பு நிலையத்துக்குள் வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டது. மணலியின் பிற தொழிற்சாலைகளும் மோசமாக

பாதிக்கப்பட்டன. சுத்திகரிப்பு நிலையத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோதிலும், சிபிசிஎல் குழு, சுத்திகரிப்பு நிலையத்தின் பாதுகாப்பான செயல்பாட்டை உறுதி செய்து,தமிழகத்துக்கு எரிபொருட்கள் வழங்குவதை உறுதி செய்தது.தற்போது நீர்வரத்து குறைந்துள்ளது. எண்ணெய் கசிவு தொடர்பாக விசாரித்து வருகிறோம்" என தெரிவித்துள்ளது. இதனிடையே, இந்த விவகாரம் தொடர்பாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வு தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்துள்ளது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வருகிறது.

## மருத்துவர் வி.மோகனுக்கு லஷ்மிபத் சிங்கானியா விருது: குடியரசு தலைவர் வழங்கினார்



புகழ்பெற்ற நீரிழிவு நோய் மருத்துவர் வி.மோகனுக்கு, லக் ஷ்மிபத் சிங்கானியா விருதை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கினார்.

**சென்னை:** நீரிழிவு நோய்க்கான ஆராய்ச்சியில் சிறந்த பங்களிப்புகளை வழங்கியதை பாராட்டும் வகையில் டாக்டர் மோகன் நீரிழிவு சிறப்பு மையம் மற்றும் மெட்ராஸ் நீரிழிவு ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் வி.மோகனுக்கு லஷ்மிபத் சிங்கானியா விருதை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கினார். ஐஐஎம் லக்னோ மற்றும் புதுடெல்லியில் உள்ள தொழில்துறை கூட்டு நிறுவனமான ஜேகே அமைப்பு சார்பில் 2022-23 ஐஐஎம் லக்னோ தேசிய தலைமை விருதுகள் வழங்கும் விழா புதுடெல்லியில் உள்ள

விக்யான் பவனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார்.

இதில், ‘அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் தலைவர்’ என்ற பிரிவில் லஷ்மிபத் சிங்கானியா விருதுக்கு டாக்டர் மோகன் நீரிழிவு சிறப்பு மையம் மற்றும் மெட்ராஸ் நீரிழிவு ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் வி.மோகன் தேர்வு செய்யப்பட்டிருந்தார். அவருக்கு, குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, லஷ்மிபத் சிங்கானியா விருதை வழங்கி கவுரவித்தார். இந்த பிரிவில் விருது பெறும் இரண்டாவது இந்திய மருத்துவர் என்ற பெருமையையும் டாக்டர் மோகன் பெற்றுள்ளார். இதுகுறித்து மருத்துவர் மோகன் கூறுகையில், ‘கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்திய சர்க்கரைநோய் குறித்த எங்கள் ஆராய்ச்சிக்கு இந்த மதிப்புமிக்க விருதுகிடைத்திருப்பது என்பது எங்களுக்கு உற்சாகத்தை தருகிறது’ என்றார்.

## சூரியனை படம்பிடித்த ஆதித்யா விண்கலம்: ஆராய்ச்சிகளுக்கு உதவும் என இஸ்ரோ தகவல்



இஸ்ரோவின் ஆதித்யா விண்கலத்தில் உள்ள சூட்தொலைநோக்கி மூலம் வெவ்வேறு அலை நீளங்களில் எடுக்கப்பட்ட சூரியனின் படங்கள்.

**சென்னை:** ஆதித்யா விண்கலத்தின் சூட் தொலைநோக்கி மூலம் வெவ்வேறு அலைநீளங்களில் எடுக்கப்பட்ட சூரியனின் படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக ஆதித்யா எல்-1 எனும் நவீன விண்கலத்தை இந்தியவிண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம் பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த செப்டம்பர்2-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. இது பல்வேறுகட்ட பயணங்களை கடந்து சூரியனின் எல்-1 பகுதியைநோக்கி சீரான வேகத்தில் பயணித்து வருகிறது. அதற்கான சுற்றுப்பாதையை விண்கலம் ஜனவரி முதல் வாரத்தில் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் ஆதித்யா விண்கலம் எடுத்த சூரியனின் புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

**7 ஆய்வுக் கருவிகள்:** அதன்விவரம் வருமாறு;- ஆதித்யா விண்கலத்தில் மொத்தம் 7 ஆய்வுக் கருவிகள் உள்ளன. இதில் ஹெல்1ஓஎஸ், ஏபெக்ஸ் ஆகிய சாதனங்கள்கடந்த அக்டோபர், செப்டம்பர் மாதங்களில் ஆய்வுப் பணிகளை தொடங்கி தரவுகளை வழங்கி வருகின்றன. தொடர்ந்து சூட் (The Solar Ultraviolet Imaging Telescope-SUIT) எனும் மற்றொரு தொலைநோக்கி கருவியானது நவம்பர் 20-ம் தேதி முதல் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இது சூரியனின் முதல் 2 அடுக்குகளான போட்டோஸ்பியர் மற்றும் குரோமோஸ்பியரில் இருந்து வெளிவரும் புறஊதா கதிர்கள் மற்றும் கதிர் வீச்சு மாறுபாடுகள் குறித்து ஆராய்ந்து வருகிறது.

இதற்கிடையே சூட் தொலைநோக்கி வாயிலாக 200 முதல் 400 நானோ மீட்டர் வரையான வெவ்வேறுஅலைநீளங்களில் எடுக்கப்பட்ட முழுமையான புகைப்படங்களின் தொகுப்பு இஸ்ரோ இணையத்தில் (/www.isro.gov.in/) வெளியிடப்பட்டுள்ளது. இந்த படங்கள் டிசம்பர் 6-ம் தேதி எடுக்கப்பட்டவைகளாகும். இந்த தரவுகள் சூரியனின் போட்டோஸ்பியர், குரோமோஸ்பியர் பற்றிய சிக்கலான ஆராய்ச்சிகளுக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

EVA STALIN IAS ACADEMY